**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C. 98/2023

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக் கிழமை PW4 இன்/ வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

Additional witness examined as PW4

| | | |
|---|---|---|
| Date | : | 26.03.2026 |
| Name | : | கழனியப்பன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

Accused present.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.04.2023 ம் தேதிகாலை 9.00 மணிக்கு திருவெண்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது சீர்காழி தாலுக்கா புத்தூர் குமிளன் காடு கபாலி முதலியார் தெருவை சேர்ந்த ரவிச்சந்திரன் மகன் தில்லைக்கரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 84/2023 U/s. 294(b), 352, 506(ii), IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் அண்ணாதுரை விசாரணைக்கு எடுடுத்துக்கொண்டார். புகார் **அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கின் ஆய்வாளர்அண்ணாதுரை என்பவர் இவ்வழக்கினை புலன் விசாரணை எடுதத்துக் கொண்டு அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலு, வீரமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அது **அ.சா.ஆ. 4, 5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** சாட்சிகள் தில்லைகரசன், கண்ணன், கண்ணன், மணிகண்டன், ஜெயராமன், பாலு, வீரமணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் சட்ட பிரிவை அன்றை தினமே மாற்றம் செய்து 84/2023 U/s. 294(b), 352, 506(ii), 307 IPC ன் படி பிரிவு மாறுதல் அறக்கை தாக்கல் செய்தார் **அது அ.சா.ஆ. 6 ஆகவும்** வழக்கின் எதிரி இளக்கியராஜ் என்பவரை 06.05.2023 ம் தேதி 12.00 மணிக்கு கருவி பஸ்பாட் அருகே குற்ற காரணம் கூறி கைது செய்து கைது விபத்தை அவரது உறவினர்களுக்கு தெரியபடுததியும் எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், சாட்சிகள் முருகவேல், கோதவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானக முன் வந்து கொடுத்த ஒப்பபுதல் வாக்குமூல்தை பதிவு செய்தும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த 24.7 செ.மீ நீளமுள்ள துருபிடித்த துணி வெட்டும் கத்தரிகோல் ஒன்று மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பறுதல் மகசரில் கைப்பற்றி மகசரில் கைப்பற்றி உள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்ப்டட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 7, 8 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. படிவம் 95 அ.சா.ஆ. 9 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** சாட்சிகள் முருவேல் கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றுள்ளார். இவ்வழக்கில் காயம் பட்ட சாட்சி தில்லை கரசன் என்பவரை 08.05.2023 ம் தேதி மறுவிசாரணை செய்துவாக்குமூலம் பதிவு செய்துள்ளர். வழக்கு பதிவ செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்தி வாசன் என்பவரை விசாரணை செய்து இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 11.11.2020 ம்தேதி எதிரிகள் மீது ஆய்வாளர் ராஜேஷ் என்பவர் சட்டபிரிவுகள் U/s. 294(b), 352, 506(ii), 307 IPC ன் ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இந்த வழக்கை நான் நேரடியாக விசாரணை செய்ய வில்லைஎன்றால் சரிதான். என் சக அதிகாரி தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யாமல் அனைத்து வழக்கு ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம்என்றால் சரியல்ல. வழக்கின் தடய பொருட்கள் எங்களால் ஜோடிக்க பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் வாதி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில்

எதிரிகள மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைஎன்றால் சரியல்ல.